**O.S.No.127/2015**

வா.சா.1, திரு.கருப்பசாமி
நாள் : 13.10.2025 நேரம் : 11.12 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)இந்த வழக்கின் பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமான விவரங்களை எனது வழக்கறிஞரிடம் யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன். நான் இளங்கலை பட்ட படிப்பு படித்துள்ளேன். நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதை கேட்டும் மற்றும் மின் இணைப்பு, அடிப்படை வசதிகள் கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எத்தனை லக்க சொத்துகளுக்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.188/9ல் 17 1/2 அடி கிழமேல் 2 1/4 தென்வடல் அளவு உள்ள 2 லக்க சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2)தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் தந்தை வழி பூர்வீக பாத்தியப்பட்டது. எனது தந்தை வழி பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துகள் அனைத்தையும் எனது தந்தை உயிருடன் இருக்கும் போதே எனது சகோதரர்களுக்குள் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் தாவா சொத்துகளை மட்டும் தான் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டோம், வேறு சொத்துகளை பாகம் பிரிக்கவில்லை. மேற்படி பாகப்பிரிவினையில் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் கொடுக்கப்பட்ட சொத்துகளின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3)நானும், எனது சகோதரர்களான பிரதிவாதிகளும் மேற்படி பாகப்பிரிவினையில் எங்களுக்குள் ஒதுக்கப்பட்ட இடங்களில் தனித்தனியாக ஓட்டு வீடுகள் கட்டி குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். மேற்படி ஓட்டு

வீடுகள் பழுதடைந்துவிட்டதால் மேற்படி வீடுகளை இடித்துவிட்டு அரசு இலவச வீடு கட்டி கொடுக்கும் திட்டமான பசுமை வீடு திட்டத்தில் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரிதான். சர்வே எண்.188/9 ல் உள்ள உட்பிரிவுகளுக்கு உட்பட்ட சொத்துக்களுக்குள் பொதுப்பாதை உள்ளது என்பதற்கோ அல்லது எங்களால் பொதுப்பாதை விடப்பட்டுள்ளது என்பதற்கோ ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை, எங்களுக்குள் வாய்மொழியாக தான் பேசப்பட்டது.

4)எனது வீட்டின் தலைவாசல் தெற்கு புறம் உள்ளது என்றால் சரியல்ல, வடபுறம் தான் உள்ளது. எனது வீட்டிற்கு தென்புறமும் வாசல் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்கே கிழமேல் தெருவும், கிழக்கே தென்வடல் தெருவும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஆணையர் பார்வையிடும் போது நான் ஸ்தலத்தில் இருந்தேன் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் பத்தி 2ல் தாவா சொத்துகளுக்கு கிழக்கே தென்வடல் சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி தென்வடல் சாலையின் மேற்கே தான் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் பத்தி 6ல் 2ம் பிரதிவாதி அவருடைய பாகத்தில் தான் வீடு கட்டி உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறு.

5)எனது வீடு ஓட்டு வீடாக இருக்கும் போது மின் இணைப்பு இருந்ததா என்றால் இருந்தது, எனக்கும், பிரதிவாதிகளுக்கும் கிழக்கே உள்ள தென்வடல் மின் கம்பத்திலிருந்து மின் இணைப்பு எடுக்கப்பட்டிருந்தது. எனது வீடு ஓட்டு வீடாக இருந்த போது மேற்கே இருந்த கோட்டையன் வீடு வழியாகத்தான் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அது தற்காலிகமாக தான் எடுக்கப்பட்டிருந்தது, நிரந்தர மின் இணைப்பு கிழக்கு பக்கத்திலிருந்து உள்ளது. மேற்படி சங்கதியை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனது வீட்டிற்கு கிழக்கு பக்கத்திலிருந்து தான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்யும் போது எனது வீட்டிற்கு

கிழக்கு பக்கத்திலிருந்து தான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6)எனது வீட்டிற்கு கிழக்கே இருந்தது குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே எனது வீட்டிற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் தாவா 2 வது பரிகாரமான நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பொதுப்பாதையாக இருந்ததற்கு எந்த வகையான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா 1 வது லக்க சொத்து விவரத்தில் கிழக்கே தென்வடல் வீதி உள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா 2 வது லக்க சொத்திற்கு சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, சர்வே எண்.188/9 மற்றும் 188/10 என குறிப்பிட்டுள்ளேன்.

7)நான் எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்யாமல் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்களில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சொத்து முழுவதிலும் வீடு கட்டிவிட்டு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கும் எண்ணத்தோடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையிலும் தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பட்டா வழங்கப்பட்டு அதில் அனுபவம் செய்தும் புழக்கத்திற்காக இடங்கள் விட்டும் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யாமல் பிரதிவாதிகளின் சொத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனக்கு எந்த

பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தான் பிரதிவாதிகளின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.50 AM

APARNA JUDIT CHARLES
Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.10.13 11:31:51 +0530